**பிப்ரவரி – 23**


# TNPSC துளிகள்

- மத்திய அரசாங்கமானது, தலைமைப் பொருளாதார ஆலோசகரான (CEA) V.அனந்த நாகேஸ்வரனின் பதவிக் காலத்தினை 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்துள்ளது.
- முதல்வர் ரேகா குப்தா தலைமையிலான டெல்லி அமைச்சரவையானது, புதிய சட்ட மன்றத்தின் முதல் அமர்வில் மத்திய அரசாங்கத்தின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தினை அமல்படுத்துவதற்கும் 14 CAG அறிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கும் என்று ஒப்புதல் அளித்துள்ளது.
- ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) நிறுவனமானது, போர் விமானங்கள் ஒருங்கிணைப்பு அமைப்பு (CATS) - Warrior என்ற முழு அளவிலான சோதனை இயந்திர தரை வழி ஓட்டச் சோதனையினை நடத்துவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லை எட்டியுள்ளது.
- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மீத்தேன் மற்றும் கார்பன் டை ஆக்சைடை மெத்தனோட்ரோபிக் (சாணவளியுண்ணி) பாக்டீரியாவைப் பயன்படுத்தி தூய்மையான உயிரி எரிபொருளாக மாற்றுவதற்கான மேம்பட்ட உயிரியல் முறையை உருவாக்கியுள்ளனர்.
- கூகிள் நிறுவனத்தின் டீப் மைண்ட் ஆய்வக நிறுவனமானது, தற்போதுள்ள மிகவும் பெரும்பாலான கருவிகளை விடவும், அதிக நாட்களுக்கு முன்னதாகவும் வானிலையை முன்னறிவிக்கக்கூடிய GenCast எனப்படும் செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியினை வெளியிட்டுள்ளது.
- ரூர்க்கி இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், டை எத்தில் ஹெக்ஸைல் தாலேட் (DEHP) நெகிழியாக்கியினை சிதைப்பதற்காக வேண்டி சல்போபாசிலஸ் அமிலோபிலஸால் எனப்படும் மண் பாக்டீரியாவினால் உற்பத்தி செய்யப்படும் ஈஸ்டெரேஸ் நொதியை வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளனர்.
- பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) 2025 ஆம் ஆண்டின் வரைவு விதிமுறைகள் குறித்த இரண்டாவது தேசிய மாநாடு ஆனது, அந்த வரைவை எதிர்க்கின்ற வகையில் தெலுங்கானா, தமிழ்நாடு, கேரளா மற்றும் ஜார்க்கண்ட் ஆகிய சில மாநிலங்களின் பங்களிப்புடன் கேரளாவின் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.
- மத்திய அரசு ஆனது, புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டிற்கான தலைமைத் தகவல் அதிகாரி (CIO) மாநாட்டில் எண்ணிம நிறுவன அடையாளக் கையேட்டை (DBIM) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியக் கடற்படையின் INSV தரிணி என்ற கப்பல், நவிகா சாகர் பரிக்ரமா II எனப் படும் உலகளாவியச் சுற்றுப்பயணத்தின் மூன்றாவது மற்றும் மிகவும் சவாலான ஒரு கட்டத்தை முடித்து கனடாவின் போர்ட் ஸ்டான்லியில் நுழைந்துள்ளது.
- தீவிரவாதத்திற்கு நிதி உதவி வழங்கலை எதிர்த்தல் (NMFT) தொடர்பான நான்காவது மாநாடு ஆனது ஜெர்மனியில் நடைபெற்ற நிலையில் இதில் புது டெல்லியில் நிரந்தர NMFT செயலகத்தினை நிறுவ இந்தியா முன்மொழிந்துள்ளது.
- 28 வது கிரேட் பேக்யார்டு பறவைகள் கணக்கெடுப்பில், 543 இனங்களுடன் தொடர்ந்து மூன்றாவது முறையாக மேற்கு வங்காளம் முன்னிலை வகிக்கிறது.
- தொழில் துறை வல்லுநர்கள் குழுவால் 1924 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவப் பட்ட மங்களூருவில் உள்ள கர்நாடகா வங்கி லிமிடெட் (KBL) நிறுவனமானது, சமீபத்தில் தனது 100 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

- புது டெல்லியில் நடைபெற்ற 100வது SKOCH உச்சி மாநாட்டில், நாகாலாந்து மாநில வன மேலாண்மை திட்டத்திற்கு (NFMP) 2024 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க SKOCH விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.
- அசாம் மாநிலத்தில் பாம்பாக்ஸ் சீபா (சிவப்பு பட்டு பருத்தி மரத்தின்) என்ற மலர்களின் கண்கவர் அழகினை மிக நன்கு கொண்டாடும் விதமாக இரண்டு நாட்கள் அளவிலான 2வது சிமோலு திருவிழா கொண்டாடப்பட்டது.

# தமிழ்நாடு செய்திகள்

## SC/ST ஆணையத்திற்குப் புதிய உறுப்பினர்கள் 2025



- மிகப் பிரபல எழுத்தாளரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான இமயம் என்ற V.அண்ணாமலை, தமிழ்நாடு மாநிலப் பட்டியலிடப்பட்ட சாதியினர் / பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் ஆணையத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- S.செல்வகுமார் (கோவை மாவட்டம்), S.ஆனந்த ராஜா (தஞ்சாவூர்), M.பொன் தௌஸ் (நீலகிரி) மற்றும் P.இளஞ்செழியன் (திருநெல்வேலி) ஆகியோர் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இளஞ்செழியன் இந்த ஆணையத்தில் மீண்டும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- இந்த ஆணையத்தின் உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகள் ஆகும்.
- நமது மாநில அரசானது 2021 ஆம் ஆண்டு SC / ST சட்டத்தின் கீழான தமிழ்நாடு மாநில ஆணையத்தின் விதிகளின் கீழ் இந்த ஆணையத்தை அமைத்துள்ளது.
- ஓய்வு பெற்ற சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதியான S. தமிழ்வாணனை இந்த ஆணையத்தின் தலைவராக அரசு நியமித்துள்ளது.
- 1955 ஆம் ஆண்டு உரிமையியல் சார் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் SC/ST (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான உரிமைகளின் மீறல்களுக்குப் பொதுத் தீர்வு காண்பதே இதன் முக்கியப் பணியாகும்.
- இது இத்தகைய உரிமை மீறல்களைத் தடுப்பதில் ஓர் அரசாங்க ஊழியரின் அலட்சிய நடவடிக்கை குறித்தும் விசாரணை மேற்கொள்கிறது.

# தேசியச் செய்திகள்

## இந்தியா - IALA அமைப்பின் துணைத் தலைமைப் பொறுப்பு

- கடல்சார் போக்குவரத்திற்கான பல்வேறு உதவிகளுக்கான ஒரு சர்வதேச அமைப்பின்


(IALA) துணைத் தலைமைப் பொறுப்பிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- இந்தியா 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் IALA சபையின் கூட்டத்தையும், 2027 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் IALA மாநாடு மற்றும் பொதுச் சபையையும் மும்பையில் நடத்தவுள்ளது.
- IALA ஆனது 1957 ஆம் ஆண்டில் ஓர் அரசு சாரா அமைப்பாக (NGO) நிறுவப்பட்டது.
- இது கடல்சார் துறையில் அவற்றின் அனுபவங்களையும், சாதனைகளையும் மிக நன்கு பரிமாறிக் கொள்ளவும், ஒப்பிட்டுப் பார்க்கவும் வாய்ப்பளிக்கிறது.




# சர்வதேசச் செய்திகள்

## வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் உமிழ்வுக் குறைப்பு




- உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) மாறுதல் மிக்க தொழில்துறைக் குழுக்கள் என்ற முன்னெடுப்பில் 13 புதிய தொழில்துறைக் குழுக்கள் இணைந்துள்ளன.
- இது 16 நாடுகள் மற்றும் ஐந்து கண்டங்களில் இருந்து இந்த மன்றத்தில் பங்கேற்கும்

மொத்தக் குழுக்களின் எண்ணிக்கையை 33 ஆக உயர்த்தியது.

- ஆஸ்திரேலியா, பிரேசில், கொலம்பியா, இந்தியா, நெதர்லாந்து, சவுதி அரேபிய நாடு, சுவீடன், தாய்லாந்து மற்றும் ஐக்கியப் பேரரசு ஆகிய நாடுகளைச் சேர்ந்தக் குழுக்கள் புதிதாக இந்த மன்றத்தில் இணைந்துள்ளன.
- இந்த மிகப்பெரும் முன்னெடுப்பானது பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை நன்கு ஊக்குவிக்கும் அதே வேளையில், பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு COP26 மாநாட்டில் தொடங்கப்பட்டது.
- 33 குழுக்களும் ஒரு சேர ஆண்டிற்கு 832 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடுக்குச் சமமான உமிழ்வைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன.
- இது சவூதி அரேபியாவின் உமிழ்வுகளுக்குச் சமமானதாகும்.
- இந்த குழுக்கள் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 492 பில்லியன் டாலர் பங்களிப்பைக் கொண்டுள்ளன மற்றும் சுமார் 4.3 மில்லியன் வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## சந்திர மண் மாதிரியிலிருந்து சிலிக்கான் கார்பைடைப் பிரித்தெடுத்தல்





- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனனது, சந்திர மண் மாதிரியில் இருந்து சிலிக்கான் கார்பைடைப் பிரித்தெடுப்பதில் வெற்றி அடைந்துள்ளது.
- இந்த வளர்ச்சியானது, நிலவில் வாழ்விடங்களை உருவாக்குவதற்கு என்று சிலிக்கான் கார்பைடு அடிப்படையிலான கலவைகளை உருவாக்க வழி வகுக்கும்.
- சிலிக்கான் கார்பைடு என்பது சிலிக்கான் மற்றும் கார்பனின் கலவையாகும்.
- 382 கிலோ எடை கொண்ட நிலவுப் பாறைகள் மற்றும் மண் மட்டுமே பூமிக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.
- எனவே, நிறுவனங்கள் ஆராய்ச்சிக்காக சந்திர மண் மாதிரிகளை உருவாக்குகின்றன.


- நிலவின் மலைப்பகுதிகள் அலுமினியம் மற்றும் கால்சியம் போன்ற பிற தனிமங்கள் உடன், சிலிக்கான் நிறைந்தவை ஆகும்.

## இன்கதாசோ அண்டம்

- தென்னாப்பிரிக்க நாட்டின் MeerKAT என்ற ஒரு தொலைநோக்கியானது, 'சிக்கல்' என்று பொருள்படுகின்ற 'இன்கதாசோ' என்று பெயரிடப்பட்ட ஒரு புதிய இராட்சத ரேடியோ அண்டத்தினைக் கண்டறிந்துள்ளது.
- இந்த மாபெரும் அண்டமானது 3.3 மில்லியன் ஒளி ஆண்டுகள் அளவிலானது.
- இது நமது பால்வெளி அண்டத்தினை விட 32 மடங்கு பெரியது மற்றும் பூமியிலிருந்து 1.44 பில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- MeerKAT ஆனது மிகவும் விரைவில் சதுர கிலோமீட்டர் தொகுப்பு ஆய்வகத்தின் (SKA) ஒரு பகுதியாக மாற உள்ளது.





## இந்தியாவின் நியூரோமார்பிக் சாதனம்




- அறிவியலாளர்கள் அழுத்தத்தை உணர்ந்து, வலி உணர்வைப் பிரதிபலித்து அதற்கு ஏற்ப மின் உணர்வினை மாற்றியமைக்கின்ற அணியக் கூடிய சாதனத்தை உருவாக்கி உள்ளனர்.

- நியூரோமார்பிக் (நரம்பியல் மண்டல அமைப்பினை ஒத்த) சாதனங்கள் ஆனது, மனித உடல் ஆனது ஒரு வலியை எவ்வாறு உணர்கிறது மற்றும் அதற்கேற்ப எவ்வாறு பதில் அளிக்கிறது என்பது பற்றிய கருத்தாக்கங்களை வழங்குகின்றன.
- மிக விரிவடையக் கூடிய ஒரு பொருளில் பொருத்தப்பட்ட ஒரு வெள்ளிக் கம்பி வலை அமைப்பைப் பயன்படுத்தி இந்தச் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

## துளிமம் சார்ந்த தொலைபெயர்ச்சி





- ஆராய்ச்சியாளர்கள் லாஜிக் கேட் எனப்படும் முறைமை கட்டளைகளின் குவாண்டம் / துளிமம் அடிப்படையிலான தொலைபெயர்ச்சியினை மேற்கொண்டுள்ளனர்.
- குவாண்டம் கணினிகள் ஆனது, வழக்கமான கணினிகளின் பிட்களுக்குப் பதிலாக குவிட்களை (குவாண்டம் பிட்கள்) பயன்படுத்துகின்றன.
- இருப்பினும், குவாண்டம் கணினியாக்கத்தின் குவிட்ஸ் மேம்பாட்டுத் திறன் என்பது அறிவியலாளர்களுக்கு ஒரு சவாலாகவே உள்ளது.
- இந்த தொலைதூர அமைப்புகளுக்கு இடையேயான தொடர்புகளை உருவாக்க என்று அவர்கள் குவாண்டம் தொலைபெயர்ச்சியினைப் பயன்படுத்துகிறார்கள்.
- குவாண்டம் தொலைபெயர்ச்சி என்பது "குவாண்டம் பின்னல்" என்று அழைக்கப்படும் ஒரு அமைப்பினை மிக நன்குப் பயன்படுத்தி ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு தகவல்களை அனுப்புவதை உள்ளடக்கியது.
- இது ஓர் பொருளை அனுப்புவது போல அல்லாமல், அது ஒரு துகளின் நிலை அல்லது அதன் தன்மையை இடம் மாற்றுகிறது.

## புற்றுநோய் சிகிச்சைக்கான மேம்பட்ட நீர் ஏற்புப் பலபடிச் சேர்மம்

- கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் கொல்கத்தாவின் போஸ் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் இடம் சார்/உறுப்பு சார் புற்றுநோய் சிகிச்சைக்காக ஒரு மேம்பட்ட ஊசி வழி உட்செலுத்தக் கூடிய நீர் ஏற்புப் பலபடிச் சேர்மத்தினை உருவாக்கியுள்ளனர்.

- இந்த நீர் ஏற்புப் பலபடி சேர்மம் ஆனது, கட்டுப்படுத்தப்பட்ட முறையில் மருந்துகளை உடலில் வெளியிடச் செய்வதன் மூலம் ஆரோக்கியமான செல்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்பதோடு, புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளுக்கான மிக நிலையான ஒரு தேக்க மையமாகச் செயல்படுகிறது.
- இந்த நீர் ஏற்புப் பலபடிச் சேர்மம் ஆனது புற்றுநோய்க் கட்டி உள்ள பகுதிக்கு மட்டுமே துல்லியமாக மருந்துகளை வழங்குவதால் நேரடி உறுப்பு சார் செயல்பாட்டை உறுதி செய்கிறது.
- நீர் ஏற்புப் பலபடிச் சேர்மங்கள் என்பவை நீர் சார்ந்த, முப்பரிமாண பலபடிச் சேர்ம வலையமைப்புகள் ஆகும் என்பதோடு அவை திரவங்களை உறிஞ்சி தக்க வைத்துக் கொள்ளும் திறன் கொண்டவை.
- அவற்றின் தனித்துவமான அமைப்பு ஆனது, உயிருள்ளத் திசுக்களை ஒத்திருப்பதால், அவை உயிரி மருத்துவப் பயன்பாடுகளுக்கு ஏற்றதாக அமைகின்றன.




## ஜாவெலின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணை

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகியன ஜாவெலின் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணைகளுக்கான புதிய கொள்முதல் மற்றும் இணைத் தயாரிப்பு ஏற்பாடுகளைத் தொடர்வதற்கான திட்டங்களை அறிவித்துள்ளன.
- FGM-148 ஜாவெலின் என்பது அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட மிகவும் மேம்பட்ட பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டுதல் எறிகணை அமைப்பு ஆகும்.
- இது மனிதனால் சுமந்து செல்லக்கூடிய வகையிலான, தோள்பட்டையில் வைத்து சுடக் கூடிய வகையிலான, ஒரு கவச எதிர்ப்பு அமைப்பு ஆகும், மேலும் இது ஏவப்பட்ட பிறகு இலக்கை நோக்கி தானாகவே முன்னேறிச் செல்கிறது.

❖ இதன் திறன் மிகு தாக்குதல் வரம்பு 2.5 கி.மீ ஆகும்.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## IUCN OECMs அறிக்கை





**Figure 2.** Five key elements related to OECMs that are addressed in these guidelines. (Source: Prepared by the report authors)

❖ IUCN அமைப்பானது, 'Guidance on Other Effective Area-Based Conservation Measures - இடம்சார் அடிப்படையிலான இதர செயல்திறன் மிக்க நடவடிக்கை தளம் குறித்த வழிகாட்டுதல் (OECMs) என்ற அறிக்கையினை வெளியிட்டுள்ளது.


❖ இந்த ஒரு அறிக்கை ஆனது, OECMs மூலம் நிலம், நீர் மற்றும் கடலோரப் பகுதிகளைப் பாதுகாப்பது குறித்த முக்கியமான வழிகாட்டுதலை வழங்குகிறது.

❖ 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தப் பகுதிகளில் 30% பகுதிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற 2022 ஆம் ஆண்டு குன்மிங்-மாண்ட்ரியல் உலகளாவிய பல்லுயிர்ப்பெருக்கக் கட்டமைப்பின் (KMGBF) மூன்றாவது இலக்கினை அடைய இது உதவும்.

- OECMs ஆனது, முறையான பாதுகாக்கப்பட்ட பகுதிகள் (PAs) அல்ல, ஆனால் பல்லுயிர்ப் பெருக்க பாதுகாப்பிற்கு பங்களிக்கின்றன.
- இந்தியாவானத்து சுமார் 14 இடம்சார் அடிப்படையிலான இதரச் செயல்திறன் மிக்க நடவடிக்கைத் தளங்களைக் கொண்டுள்ளது.

## புதிய தாவரநோய்க்கிருமி பூஞ்சை


- ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் எபிகோக்கம் இண்டிகம் என்ற ஒரு புதிய வகை தாவர நோய்க் கிருமி பூஞ்சையைக் கண்டறிந்துள்ளனர்.
- இது கிரைசோபோகன் ஜிசானியோடைடுகளில் (வெட்டிவேர்) மிக அதிகரித்து வரும் இலைப் புள்ளி நோயுடன் தொடர்புடையது.
- தாவர நோய்க்கிருமிப் பூஞ்சைகள் ஆனது, தாவரங்களில் பல நோய்களை ஏற்படுத்தி வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில் குறிப்பிடத்தக்க பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன.




## மௌனா லோவா கார்பன் டை ஆக்சைடு முன்னெச்சரிக்கை 2025


- இது ஹவாயில் உள்ள மௌனா லோவா ஆய்வகத்திலிருந்துப் பெறப்பட்ட பல்வேறு அளவீடுகளின் முன்னறிவிப்பாகும்.
- 2025 ஆம் ஆண்டு மே மாதத்தில், வளிமண்டல கார்பன் டை ஆக்சைடு அளவுகள் ஆனது 429.6 ppm ஆக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.
- இது 2 மில்லியன் ஆண்டுகளுக்கும் மேலாக பதிவாகாத மிக அதிகபட்ச வளிமண்டல $CO_2$ செறிவாக இருக்கும்.
- 2024-2025 ஆம் ஆண்டுகளில் இது தோராயமாக 2.26 ppm அதிகரித்துள்ளது.
- 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பதிவு செய்யப்பட்ட 3.58 ppm என்ற வருடாந்திர அதிகரிப்பு ஆனது, கணிக்கப்பட்ட 2.84 ppm அதிகரிப்பை விட அதிகமாகும்.
- 2023 ஆம் ஆண்டில் உலகளவில் ஏற்பட்ட காட்டுத்தீ 7.3 பில்லியன் டன் $CO_2$ வாயுவினை வெளியேற்றியது.

- புதைபடிவ எரிபொருட்களிலிருந்து வெளியாகும் உலகளாவிய கார்பன் வெளியேற்றம் ஆனது, 2024 ஆம் ஆண்டில் இதுவரை இல்லாத அளவை எட்டியதோடு மேலும் இது 2024 ஆம் ஆண்டில் 41.6 பில்லியன் டன்களாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பெண்களின் சுகாதார நலனில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கான செயல்திட்டம் குறித்த அறிக்கை




- இந்த அறிக்கையானது உலகப் பொருளாதார மன்றம் மற்றும் மெக்கின்சி சுகாதார நிறுவனம் ஆகியவற்றால் தயாரிக்கப்பட்டது.
- ஆண்களுடன் ஒப்பிடும் போது, பெண்கள் தங்கள் வாழ்நாளில் 25% நாட்கள் அதிகமாக உடல்நலம் குன்றிய நிலையில் வாழ்கின்றனர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 9 பாதிப்பு நிலைகள், பெண்களின் சுகாதார இடைவெளியில் 1/3 பங்கினைக் கொண்டுள்ளன.
- கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய், பேறுகாலத்திய உயர் இரத்த அழுத்தக் கோளாறுகள் போன்றவை அவர்களின் ஆயுட்காலத்தினையும், ஆரோக்கியத்தையும் பாதிக்கும் நிலைகளும் இதில் அடங்கும்.

- இந்த சுகாதார இடைவெளியை நிவர்த்தி செய்வது, 2040 ஆம் ஆண்டிற்குள் உலகின் வருடாந்திர மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 1 டிரில்லியன் டாலரை உருவாக்க உதவும்.

## உலகளாவிய நிதி அமைப்புக் கூறாக்க அறிக்கை

- இந்த அறிக்கையானது, அரசாங்கக் கொள்கைகளின் மூலம் தனித்தனியாக பிரிக்கப் படுதல் ஆனது, உலகப் பொருளாதாரத்தில், உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5% வரையிலான பங்கினைக் கொண்ட 0.6 டிரில்லியன் டாலர் முதல் 5.7 டிரில்லியன் டாலர் வரையிலான இழப்பினை ஏற்படுத்தும் என்று மதிப்பிட்டுள்ளது.
- பெருமளவு குறைக்கப்பட்ட ஒரு வர்த்தகம் மற்றும் பன்னாட்டுக் மூலதன முதலீடுகள் மற்றும் பொருளாதார திறன் இழப்பு ஆகியவையே இதற்கான காரணங்களாகும்.
- இந்தியா மற்றும் சில வளர்ந்து வரும் பொருளாதாரங்கள், மிகவும் அதிகமான கூறாக்க சூழ்நிலையில், மிகப்பெரிய இழப்பினைத் தாங்கக் கூடியவை.
- உலகக் கையிருப்பில் டாலரின் பங்கு ஆனது ஏற்கனவே 71 (1999) சதவீதத்திலிருந்து 58% (2024) ஆக குறைந்துள்ளது.
- இந்த முக்கிய கூறாக்கமானது பொருளாதார ரீதியாக (அல்லது ஒத்த) சொத்துக்களின் விலைகள் அல்லது சுதந்திரமானப் பன்னாட்டு மூலதன முதலீடுகள் போன்றவற்றில் உள்ள அதிகார வரம்புகளில் இருக்கும் வேறுபாடுகளின் அளவைக் குறிக்கிறது.





## கல்வி பற்றிய UNICEF அமைப்பின் அறிக்கை

- கற்றலில் குறுக்கீடுகள்: 2024 ஆம் ஆண்டில் பருவநிலை தொடர்பான பள்ளிக் கல்வி பெறுவதில் இடையூறு குறித்த உலகளாவிய அறிக்கையானது UNICEF அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் பருவநிலை நிகழ்வுகள் காரணமாக, முன்னிடைப் பள்ளிக் கல்வி முதல் மேல்நிலைக் கல்வி வரையிலான குறைந்தபட்சம் 242 மில்லியன் மாணவர்கள் பள்ளிக் கல்வி பெறுவதில் இடையூறுகளை எதிர் கொண்டுள்ளனர்.
- இந்த அறிக்கையானது, பள்ளிக் கல்வி பெறுவதில் இடையூறுகளுக்கு வழி வகுத்த 119 பருவநிலை இடர்களை அடையாளம் கண்டுள்ளது.
- வெப்ப அலைகளானது பள்ளிக் கல்வி பெறுவதில் மிக அதிகளவில் இடையூறுகளை ஏற்படுத்தி, குறைந்த பட்சம் சுமார் 171 மில்லியன் குழந்தைகளின் பள்ளிப் படிப்பை பாதித்தது.

- ஏப்ரல் மாதத்தில் மட்டும் 118 மில்லியன் மாணவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- வங்காளதேசம், கம்போடியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய சில நாடுகளில் பதிவான தேசிய அளவிலான பள்ளி இடையூறுகள் என்பது, சுமார் 63 மில்லியனுக்கும் அதிகம் என்ற அளவில் குழந்தைகளின் பள்ளிப் படிப்பைப் பாதித்தன.
- செப்டம்பர் மாதத்தில் ஏற்பட்ட சில வெப்ப மண்டலப் புயல்கள் சுமார் 18 மில்லியன் மாணவர்களின் பள்ளிப் படிப்பை பாதித்தன.
- ஜிம்பாவேயில், 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நீடித்த வறட்சி ஆனது சுமார் 1.8 மில்லியன் குழந்தைகளின் பள்ளிப் படிப்பை பாதித்தது.
- 2024 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பருவநிலை தொடர்பான பள்ளி இடையூறுகளால் சுமார் 127,845,148 மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதால், மிகவும் பாதிக்கப்பட்டப் பகுதியாக தெற்காசியா உள்ளது.
- இதில் பெரும்பான்மையானப் பாதிப்பு (54 மில்லியன்) இந்தியாவில் பதிவாகியுள்ளது என்ற ஒரு நிலையில் அவர்களில் பெரும்பாலோர் வெப்ப அலைகளால் பாதிக்கப்பட்டு உள்ளனர் என்பதோடு இது வங்காளதேசத்தில் சுமார் 35 மில்லியன் மாணவர்களையும் பாதித்தது.
- மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்கா, கிழக்கு மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகியன முதன்மையாக வெள்ளம் தொடர்பான இடையூறுகளை எதிர் கொண்டு முறையே 12 மில்லியன் மற்றும் 8 மில்லியன் மாணவர்களின் பள்ளிப் படிப்பைப் பாதித்தது.

**Figure 1.** Number of students affected by climate-related school disruptions in 2024, by month.





## நான்காவது தொழில் புரட்சி தாக்க அறிக்கை

- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, நான்காவது தொழிற்புரட்சி வலை அமைப்புக்கான மையத்தின் 2023-2024 ஆம் ஆண்டு தாக்க அறிக்கையை வெளியிட்டு உள்ளது.
- அறிவார்ந்த வயது, வேளாண்மை, சுகாதாரம் மற்றும் உயிரி தொழில்நுட்பம் மற்றும் ஆற்றல் மாற்றம் போன்ற பகுதிகளில், ஆராய்ச்சி மற்றும் தாக்கத்தை உருவாக்குவது குறித்து இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது.
- தெலங்கானாவில் 7,000 மிளகாய் பயிரிடும் விவசாயிகளின் சாகு பாகு சோதனைத்


திட்டமானது இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இது இந்தியாவில் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதற்கு ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவது மற்றும் புத்தாக்கங்களைக் கொண்டு உலகளாவியச் சவால்களை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற குறிப்பிடத்தக்க முன்னெடுப்புகளையும் எடுத்துக் காட்டுகிறது.




# முக்கிய தினங்கள்

## உலக சமூக நீதி தினம் - பிப்ரவரி 20





- இந்த தினம் ஆனது சமூக அநீதிகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் பாலினம், இன வெறி, சமத்துவமின்மை, மதப் பாகுபாடு போன்றவற்றின் அடிப்படையிலான பல்வேறு தடைகளை தகர்ப்பது குறித்த ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- இது உலகளாவிய சமூக அநீதிகள் குறித்து வலியுறுத்துவதோடு, அதற்கான வேண்டிய சாத்தியமான தீர்வுகள் மற்றும் மேம்பாடுகள் குறித்து ஆராய்கிறது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ''Empowering Inclusion: Bridging Gaps for Social Justice' என்பதாகும்.


# இதரச் செய்திகள்

## குய்லின்-பாரே நோய் பாதிப்பு (GBS)

- மகாராஷ்டிராவின் புனே நகரத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் உயிரிழப்புகளின் எண்ணிக்கைக்கு குய்லின்-பாரே நோய்ப் பாதிப்பு / நோய்க்குறி (GBS) ஒரு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.
- இந்தப் பகுதிகளில் கோலிஃபார்ம், E. கோலை, நோரோவைரஸ் மற்றும் C. ஜெஜூனி ஆகிய பாக்டீரியாக்கள் இருப்பதை ஒரு பகுப்பாய்வு உறுதிப்படுத்தியது.
- குய்லின்-பாரே நோய்க்குறி என்பது நோயெதிர்ப்பு அமைப்பு ஆனது நரம்புகளைத் தாக்கி, பலவீனம், உணர்வின்மை அல்லது பக்கவாதத்தை ஏற்படுத்தும் ஒரு நிலை ஆகும்.




## சிப்பிகளின் நுண்ணுயிர் எதிர்ப்புப் பண்புகள்




- சிப்பி ஹீமோலிம்பில் (இரத்தத்திற்கு சமமான) இருந்து பிரிக்கப்பட்ட நுண்ணுயிர் எதிர்ப்புப் புரதங்கள் ஆனது பல்வேறு நோய்த் தொற்றுகளுக்குக் காரணமான சில

பாக்டீரியாக்களைக் கொல்லும் திறன் கொண்டுள்ளன.

- இந்தப் புரதங்கள், பாதிப்பு மிக்க பாக்டீரியா இனங்களுக்கு எதிரான வழக்கமான சில நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் செயல்திறனையும் மேம்படுத்தும் ஒரு திறனைக் கொண்டிருக்கின்றன.
- சிப்பிகள் அவற்றின் மிகவும் இயற்கையான கடல் சார் சூழலில் பல்வேறு வகையான நுண்ணுயிரிகளின் பாதிப்பிற்கு அதிக எண்ணிக்கையில் உட்படுகின்றன.
- இதன் காரணமாக அவை வலுவான நோயெதிர்ப்புப் பாதுகாப்பை உருவாக்கியுள்ளன.
- சிட்னி பாறை சிப்பிகளின் (சாக்கோஸ்ட்ரியா குளோமெராட்டா) ஹீமோலிம்பில் உள்ள நுண்ணுயிர் எதிர்ப்புப் புரதங்கள் ஸ்ட்ரெப்டோகாக்கஸ்.spp என்ற வகையான இனப் பாக்டீரியாவைக் கொல்வதில் பயனுள்ளதாக இருக்கும்.

## உலகக் கோடீஸ்வரப் பெண்களின் பட்டியல் 2025

- வால்மார்ட் நிறுவனர் சாம் வால்டனின் மகள் ஆலிஸ் வால்டன் 112.5 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.
- பிராங்கோயிஸ் பெட்டன்கோர்ட் மேயர்ஸ் மற்றும் குடும்பத்தினர் இப்பட்டியலில் 2வது இடத்தைப் பெற்றனர்.
- ஜூலியா கோச் மற்றும் அவரது குடும்பத்தினர், சுமார் 74.2 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் இப்பட்டியலில் 3வது இடத்தைப் பெற்றனர்.
- இந்தியாவின் பணக்காரப் பெண்மணியான சாவித்ரி ஜிண்டால் & குடும்பத்தினர், 32.3 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் இதில் 7வது இடத்தில் உள்ளனர்.

| Rank | Name | Net Worth (USD) | Source of Wealth |
|---|---|---|---|
| 1 | Alice Walton | $112.5 billion | Walmart |
| 2 | Francoise Bettencourt Meyers and Family | $74.4 billion | L'Oréal |
| 3 | Julia Koch and Family | $74.2 billion | Koch Industries |
| 4 | Jacqueline Mars | $42.3 billion | Mars Inc |
| 5 | Rafaela Aponte-Diamant | $39.0 billion | Mediterranean Shipping Company (MSC) Group |
| 6 | Abigail Johnson | $36.0 billion | Fidelity Investments |
| 7 | Savitri Jindal & family | $32.3 billion | JSW Group |
| 8 | MacKenzie Scott | $32.3 billion | Amazon |
| 9 | Miriam Adelson & family | $31.5 billion | Las Vegas Sands |
| 10 | Marilyn Simons & family | $31.0 billion | Hedge Funds |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★